**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை

**IA.No.04/2025 in OS.No.85/2015**

**TNTM 03000382/2015**

1. வி.சேட்டு
2. எஸ்.செல்வி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. வி.விநாயகம்(இறந்தவர்)
2. வி.செல்வம்
3. வி.அருண் நாகன்
4. வி.செல்வரசி
5. கே.பிரகாஷ்
6. கணபதி அம்மாள்
7. வி.சின்னக்குழந்தை ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 04.02.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.R.சரவணன்,B.Com.,B.L., திரு.E.காளிதாஸ், B.Sc.,L.L.B., ஆகியோர் முன்னிலையாகியும், 1, 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.தனஞ்செயன்,M.A.,L.L.B., திரு.D.சசிகுமார்,B.A.,B.L., ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் தற்போது தாக்கல் செய்யும் 16 புகைப்படங்கள் அடங்கிய பென்-ரைவ் மற்றும் பாரதிய சாட்சிய அதிநியம் 2023 பிரிவு 63ன் படி (இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(பி)-ன் கீழான சான்று மற்றும் அவற்றுக்கான பில்கள் ஆகியவற்றை மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவண சாட்சியங்களாக ஏற்க உத்தரவு வழங்கக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. 1ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கும்:**

இம்மனுவில் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி ஆவார். 2ம் மனுதாரர்/2ம் வாதி 1ம் மனுதாரரின் மனைவி ஆவார். அவருக்காகவும் இப்பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறார். மனுதாரர் அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் மனுதாரர் வீட்டு டி.வி. மற்றும் அது சார்ந்த பொருட்களை நாசம் செய்தமைக்கும், மனுதாரர் வீட்டிலிருந்து களவாடிய பணம் ஆகியவற்றுக்கு ரூ.1,61,800/– கோரியும், மேற்சொன்ன தொகைக்கு தாவா ஷெட்யூல் சொத்துக்களை நீதிமன்ற வசப்படுத்த உத்தரவு பிறப்பிக்கும்படிக்கும் கோரி தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் வீட்டில் இல்லாத நேரத்தில், எதிர்மனுதாரர்கள் மனுதாரர் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து மனுதாரர் வீட்டிலுள்ள பொருட்களை சேதம் செய்தும், மனுதாரர் வீட்டிலிருந்த பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை களவாடிச் சென்றுவிட்டனர். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2. எதிர்மனுதாரர்கள் மனுதாரர் வீட்டினுள் நுழைந்து அராஜகமாக அனைத்து பொருட்களையும் அடித்து நொறுக்கியது சம்பந்தமாக எடுக்கப்பட்ட 16 எண்ணிக்கையிலான புகைப்படங்கள் மனுதாரர் வசம் உள்ளது. மேற்சொன்ன புகைப்படங்களை மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும்போது மேற்சொன்ன புகைப்படங்கள் அடங்கயி குறுந்தகடு மற்றும் வீடியோ கேஸட் ஆக தாக்கல் செய்திருந்தார். தற்போது குறுந்தகடு மற்றும் வீடியோ கேஸட்டை கண்ணுறக்கூடிய மின்னணு இயந்திரங்கள் இல்லாமல் போனதால், தற்போது அவற்றை சுலபமாக பார்க்கக் கூடிய பென்–டிரைவ்–ல் தரவிறக்கம் செய்தும், மேற்சொன்ன மின்னணு ஆவணங்களை ஏற்படுத்திய நபரின் சான்று மற்றும் அதற்கான செலவினங்கள் ஆகியவற்றை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன். 16 புகைபடங்கள் அடங்கிய பென் டிரைவ், பாரதிய சாட்சிய அதிநியம் 2023 சட்டப்பிரிவு 63ன் கீழ் படியான சான்று அகியவற்றை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்கவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. முதல் 6 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

மேற்படி மனுவில் கூடுதல் ஆவணங்களாக புகைப்படங்கள் 16 எண்ணிக்கை அதன் பென்டிரைவ் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்ய அனுமதி கோரும் மேற்கண்ட மனு சட்டப்படியும் நியாயப்படியும் செயல்லதக்கதல்ல. மேற்கண்ட மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் ஒருசிலவற்றை தவிர ஏனைய சங்கதிகளை இவ்வெதிர்மனுதாரர் முற்றிலுமாக மறுக்கின்றார். மேற்கண்ட 5 முதல் 7 வரையிலான நபர்களுக்கு சேர்த்து இந்த எதிருரையினை தாக்கல் செய்கிறார். மேற்கண்ட பிரமாண வாக்குமூலம் பாரா 2ல் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை. அதில் கண்டுள்ளவாறு மனுதாரர்கள் வீட்டில் டீவி, அது சார்ந்த பொருட்களையும் மற்றும் களவாடிய பணம் ஆக ரூ.1,61,800/– தொகைக்காக தாவாவில் கண்ட ஷெட்யூல்

சொத்துக்களை நீதிமன்றம் வசப்படுத்த மனு தாக்கல் செய்து உள்ளதாகவும் கண்டுள்ள சங்கதிகளை பொறுத்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேற்கண்ட பிரமாண வாக்குமூலம் பாரா 3ல் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை. அதில் கண்டுள்ளவாறு மனுதாரர் வீட்டில் இல்லாத நேரத்தில் எதிர்மனுதாரர்கள் வீட்டினுள் அத்து மீறி நுழைந்து வீட்டில் உள்ளபொருட்களை சேதம் செய்தார்கள் என்றும், பணத்தை களவாடி சென்றார்கள் என்றும், இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்க படவில்லை என்றும் கண்டுள்ள சங்கதிகளை பொறுத்து மனுதாரரே திருபணம் செய்ய வேண்டியது.

4. பிரமாண வாக்குமூலம் பாரா 4ல் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை. அதில் கண்டுள்ளவாறு எதிர்மனுதாரர்களால் சேதமாக்கப்பட்டது சம்பந்தமாக எடுக்கப்பட்ட 16 புகைபடங்கள் மனுதாரர் வசம் உள்ளதாகவும், தற்போது குறுந்தகடு, மற்றும் வீடியோ கேசட், மின்னணு இயந்திரங்கள் இல்லாமல் போனதால் அவற்றை சுலபமாக பார்க்க கூடிய பென்ரைவ் தரவிறக்கம் செய்து இருப்பதாகவும், இது சம்பந்தமாக சான்று மற்றும் அதற்கான செலவின பில்கள் உள்ளதாகவும், எனவே அவற்றை கூடுதல் ஆவணமாக ஏற்க வேண்டும் என்று கண்டுள்ள சங்கதி சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. மேற்கண்ட சங்கதிகளை பொறுத்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேற்கண்ட 1ம் மனுதாரரின் மகன்களான தினேஷ்குமார், சிவக்குமார் ஆகியோர் சேர்ந்து காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் ஆன வினாயகம் என்பவரை தாக்கியது குறித்து கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக கண்ணமங்கலம் காவல்நிலையத்தார் மேற்கண்ட மனுதாரர்கள் மற்றும் அவருடைய மகன்களுக்கு எதிராக வழக்கினை பதிவு செய்து அதன்பேரில்தான் 1ம் மனுதாரர் கைது செய்யப்பட்டார். அந்த வழக்கை வாபஸ் பெற மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரரான வினாயகத்தை கேட்டுக் கொண்டதற்கு அவர் மறுத்துவிட்ட காரணத்தினால், மேற்கண்ட காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் வினாயகம் என்பவரின் பேரில் முன் விரோதம் கொண்டு மேற்கண்ட மனுவினை தாக்கல் செய்து உள்ளனர்.

5. மேலும், ஏற்கனவே மேற்கண்ட 1ம் மனுதாரர் தன்னுடைய சகோதரி ஆன குப்பம்மாளை முன் நிறுத்தி காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் வினாயகம் மற்றும் அவருடைய சகோதரர் கிருஷ்ணன் ஆகியோரின் பேரில் கனம் நீதிமன்றத்தில் அ.எண்.107/2014 என்ற பாகப்பிரிவினை தாவாவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்கண்ட குப்பம்மாளுடைய மகளை மேற்கண்ட 1ம் மனுதாரர் சேட்டுதான் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மேற்கண்ட 1ம் மனுதாரர் இந்த எதிர்மனுதாரர்களுக்கு உண்டான பாகத்திளையும் சட்டத்திற்கு புறம்பாக அடையும் நோக்கத்தோடு செயல்பட்டு விரோதம் கொண்டு மேற்கண்ட மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்கண்ட மனுதாரர்கள் மேற்கண்ட மனுவில் எந்த

இடத்திலும், தான் எந்த வீட்டில் வசித்து வருகின்றேன் என்றும், எந்த வீட்டில் மேற்கண்ட எதிர்மனுதாரர்கள் நுழைந்து பொருட்களை சேதப்படுத்தியும் மற்றும் பணத்தை எடுத்துக் கொண்டனர் என்பது குறித்து கூறவில்லை. மேற்கண்ட ஒரு காரணத்திற்காகவே மேற்படி மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது. மேலும் மேற்கண்ட மனுதாரர்கள் சம்பவம் நடத்ததாக கூறப்படும் இடம் குறித்து தாவாவில் குறிப்ட்டவில்லை. எனினும் வசித்து வருவதாக கூறப்படும் இடமானது முழுவதுமாக சேதமடைந்த, பாழடைந்த தட்டோடு இடமாகும். மேலும் மேற்கண்ட இடத்தில் கடந்த 10 வருடமாக யாரும் குடியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் யாருமே குடியிருக்காத வீட்டில் மனுதாரர்கள் கூறுவதுபோல் டி.வி. ஸ்டாண்டு, கியாஸ் சிலிண்டர் 1 சவரன் தங்கமோதிரம், 2 சவரன் கோதுமை செயின், டெல் கம்பயூட்டர், ரிலையன்ஸ் மோடம், ஹோம் தியேட்டர், பி.எஸ்.என்.எல். வில் போன் 16 ஜி.பி. ஜி.பி. பென்–ட்ரைவ் 8 ஜி.பி. பென் ட்ரைவ். 4 ஜி.பி. திறனுள்ள பென் ட்ரைவ், ஏர்டெல், ஏர்செல், டெகோமோ, வோடோபோன் மற்றும் ரிலையன்ஸ் நெட் ஒர்க்ஸ் மல்டி ஈ.சி. ஆகியவை மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் சீட்டு ஏலத்தில் எடுக்கப்பட்ட தொகை ரூ.5000/ ஆகியவை எங்ஙனம் வைத்திருக்க முடியும் என்பதை மனுதாரர்களே நிரூபணம் செய்யவேண்டியது.

6. மனுதாரர்கள் ஆரணி தாலுக்கா, முள்ளிப்பட்டு கிராமத்தில் சர்வே காண்.230/8, 231/2, 231/3 மற்றும் 231/1எ–ல் மேற்கண்ட காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் சேர்ந்து ரூ.4,00,000/ செலவு செய்து கட்டப்பட்ட மெத்தை வீட்டில் கடந்த 10 வருடமாக குடும்பத்தோடு வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மேற்கண்ட வீட்டுக்கு அருகாமையில் அமைந்துள்ள நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு மேற்கண்ட 1ம் எதிர்மனுதாரர் ஆன காலம்சென்ற வினாயகம் மற்றும் கிருஷ்ணனும் சேர்ந்து 6 1/2 இன்ச் போர் அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மனுதாரர்கள் மனு சொத்தில் வசித்து வருவதாக கூறப்படும் இடத்திற்கும் மற்றும் மனுதாரர்கள் உண்மையில் வசித்து வரும் இடத்திற்கும் வேறுபாடாக உள்ளது. மேலும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிடுவதுபோல் எண்.117, கீழண்டை வீதி, அரிமா நகர், குப்பம் அஞ்சல், போளூர் தாலுக்கா என்ற முகவரியில் வசிக்கவில்லை. உண்மையில் மனுதாரர்கள் ஆரணி தாலுக்கா, முள்ளிப்பட்டு கிராமம், நாய்க்கன்பாளையத்தில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

7.மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சேதமடைந்த பொருட்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நிழற்புகைப்படங்கள் எப்போது எடுக்கப்பட்டது என்பது குறித்து மனுவுடன் ஆவணம் ஏதும் இணைக்கபடவில்லை. மேற்கண்ட புகைப்படங்களுக்கும் மனுவிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. மேலும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சேதமடைந்த பொருட்கள் ஏற்கனவே மனுதாரர்கள் குறிப்பிடும் வீட்டில் இருந்தது சம்பந்தமான எவ்விதமான ஆவணத்தையும் மேற்கண்ட இம்மனுவுடன்

இணைக்கப்படவில்லை. மேற்கண்ட மனுதாரர்களின் பொருட்களை எதிர்மனுதாரர்கள் திருடி எடுத்துச் சென்றுவிட்டனர் என்றும் இது சம்பந்தமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திருவண்ணாமலை அவர்களிடம் 04.11.2013ல் 1ம் மனுதாரர் புகார் கொடுத்தாகவும், இது சம்பந்தமாக அன்றே சி.எஸ்.ஆர் நகல் கொடுத்ததாகவும், மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டிருந்தாலும், மேற்கண்ட சங்கதி குறித்து சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தார் விசாரணை செய்து அதன் பேரில் மேற்கண்ட பொருட்கள் ஏதும் திருடுபோனது குறித்து சம்பவமே நடைபெறவில்லை என்ற தெரிந்து அதன் பேரில்தான் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தார் மேற்கண்ட மனுதாரர்களின் புகாரானது பொய்யானது என்று விசாரணை மூலம் தெரிய வந்து, அதன் மூலம் மேற்கண்ட எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்கண்ட மனுதாரர்கள் கொடுத்திருந்த புகாரின் பேரில் எவ்விதமான நடவடிக்கையும எடுக்கவில்லை என்பது குறிப்பிடதக்கதாகும்.

8. மனுதாரர்களின் மகன்கள் எலக்ட்ரானிக் பொருட்கள் விற்பனை செய்வது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறையிடமிருந்து லைசன்ஸோ அல்லது ஏற்கனவே எலக்ட்ரானிக் பொருட்கள் விற்பனை செய்தது சம்பந்தமாக விற்பனை வரி ரசீது போன்ற ஆவணங்கள் எதையும் மேற்படி மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மேற்கண்ட மனுதாரரின் மகன்கள் இதுபோன்ற எவ்விதமான தொழிலிலும் ஈடுபடவில்லை என்பதே உண்மையான சங்கதியாகும். மேலும் மனுதாரர்கள் சேதமடைந்ததாக கூறப்படும் பொருட்களின் மதிப்பு குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து விலை பொருட்கள் பட்டியலிட்டு அதனுடைய ஆவணம் ஏதும் மேற்கண்ட மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் நிரப்பப்பட்ட கியாஸ் சிலிண்டர் திருடு போனது குறித்து சம்பந்தப்பட்ட கியாஸ் ஏஜெண்ஸியிடம் புகார் கொடுத்தது சம்பந்தமாக மனுதாரர்கள் ஆவணம் ஏதும் மேற்கண்ட மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. மேலும் 2 சவரன் கோதுமை செயின் யாருக்கு பாத்தியப்பட்டது அவர் மூலம் தனிப்பட்ட முறையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக எவ்விதமான ஆவணத்தையும் மனுவுடன் இணைக்கப்படவில்லை.

9. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியான 15.10.2013ல் காலம்சென்ற 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 4ம் எதிர்மனுதாரர் நிலத்தில் அன்று காலை முதல் வேலை செய்துகொண்டிருந்தனர். மேலும் மேற்கண்ட தேதியில் 2ம் எதிர்மனுதாரர் இந்திய இராணுவத்திலும் மற்றும் 3ம் எதிர்மனுதாரர் மத்திய ரிசர்வ் போலிஸ் படையிலும் பணியில் இருந்தனர். மேலும் 5ம் எதிர்மனுதாரர் பிரகாஷ் என்பவர் திருமணம் செய்த பிறகு தன்னுடைய மாமியார் வீடான குடியாத்தத்திலேயே நிரந்தரமாக தங்கி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே மனுதாரர்கள் தாவாவில் சம்பவம் நடந்த்தாக கூறப்படும், இடம், நேரத்தில் எதிர்மனுதாரர்கள் யாரும் அங்கு இல்லை என்பதும் மற்றும் மேற்கண்ட சங்கதியை எதிர்மனுதாரர்கள் நிரூபிக்கவும்

தயாராக உள்ளனர் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்கின்றனர். மனுதாரர்கள் தாவாவில் குறிப்பிட்டுள்ள 1 மற்றும் 2 அயிட்டச் சொத்துக்களானது 1ம் எதிர்மனுதாரரின் சகோதரர் கிருஷ்ணன் பெயரில் அமைந்துள்ளது. மேலும் நடைபெறாத சம்பவத்திற்காக எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அவருடைய சொத்துக்களை சட்டத்திற்குப் புறம்பான வகையில் அடையவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு மனுதாரர்கள் மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் மனுவில் கண்டுள்ள சேதமடைந்த பொருட்கள்,களவாடப்பட்ட ரொக்கம் மற்றும் நகை ஆகியவை மேற்கண்ட எதிர்மனுதாரர்கள் வசம்தான் உள்ளது என்பது குறித்து எவ்விதமான ஆவணமோ, சாட்சியமோ தாக்கல் செய்யபடவில்லை என்பது குறிப்பிடதக்கதாகும்.

10. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சட்டப்படியான நடவடிக்கையினை தகுந்த காலத்திற்குள் மேற்கொண்டு அதன் பேரில் சம்பந்தப்பட்ட நீதித்துறை நடுவர் மன்றத்திலிருந்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தீர்ப்பாகும் பட்சத்தில் அதன் பேரில் தான் இவ்வெதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்கள் மனுவினை தாக்கல் செய்ய இயலும். மேலும் சட்டப்படியான நடவடிக்கையை மேற்கொள்ளாமல் சட்டத்திற்குப் புறம்பான வகையில் வேண்டுமென்றே மனுதாரர்கள் மனுவினை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தங்களுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடும் 16 எண்ணிக்கையிலான புகைப்படங்கள் தன் வசம் இருந்தாகவும், தற்போது குறுந்தகடு வீடியோ கேசட் போன்ற மின்னணு இயந்திரங்கள் இல்லாமால் போனதாகவும், எனவே தற்போது பென்டிரைவில் தரவிறக்கம் செய்தாகவும் அதன் பேரில் சான்றிதழ் மற்றும் பில்கள் தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஏற்கனவே குறுந்தகடு மற்றும் விடியோ கேசட் போன்றவை இலலாமல் போன நிலையில் மனுதாரர் எங்கனம் பென்டிரையில் எதை பார்ந்து தரவிறக்கம் செய்தார் என்பது குறித்து தன்னுடைய மனுவில் கூறிப்பிடவில்லை. எனவே மேற்கண்ட பென்டிரைவ், சான்றிதழ் மற்றும் பில்கள் அனைத்தும் மனுதாரர்கள் தாப்பில் போர்ஜ்ஜிரியாக தயார் செய்யப்பட்டு அதன் பேரில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மின்னணு சாதன பொருட்கள் குறித்து நம்பக தன்மை ஏதும் மனுதாரர் தரப்பில் விளக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட மனுதாரரின் மனுவான பிரிவு 63 (4) (c)ன் BSA Act 2023 குறிப்பிட்டுள்ள சங்கதியின் படி செல்லதக்கதல்ல.

11. 16 எண்ணிக்கையில் ஆன புகைப்படங்கள் அடங்கிய தொகுப்பில் கண்டுள்ள அனைத்தும் மனுதாரர்களால் பொய்யாக புனையப்பட்ட கருத்துக்கள் ஆகும். மேற்கண்ட புகைப்படங்களை காணும் போது அங்கு துணிகள் சிதறி கிடப்பது போல் மனுதாரர்களால் உருவாகப்பட்ட நிகழ்வுகள் ஆகும். மேலும் மேற்கண்ட புகைப்படங்கங்களை நோக்கும் போது டீ.வி. மற்றும் பிரிட்ஜி நன்றாக உள்ளதாக காணப்படுகின்றது. மேலும் சேர்கள்.

பேன், மற்றும் எலக்ரிடிக் சாமான்கள் அனைத்தும் நல்ல முறையில் உள்ளதாகவே புகைப்படங்களில் காணப்படுகின்றது. மேலும் மேற்கண்ட புகைப்படங்களில் காணப்படும் வீடானது மிகவும் சேதம் அடைந்த வசிப்பிடத்திற்கு உகந்த இடம் அல்ல என்பது நன்கு தெரிய வருகின்றது. எனவே மேற்கண்ட வசிப்பிடத்தில் மனுதாரர்கள் எப்படி வாழ்ந்து இருப்பார்கள் என்ற கேள்வி குறியும் எழுகின்றது. மேலும் சமையல் அறையில் எவ்விதமான சேதாரமும் இன்றி கேஸ் மற்றும் சாமான்கள் காணப்படுகின்றன. மேலும் மின் இணைப்பு எண் 499 என்று குறிப்பிட்டு மின்சார சாதானங்கள் அமைந்துள்ளன.

12. வாசற்கதவில் அமைத்துள்ள கொண்டியில் பூட்டு பூட்டப்பட்டுள்ளது. மேலும் கதவில் உள்ள பூட்டு திறந்த கதவில் வைக்கப்பட்டுள்ளது. எனவே கதவினை உடைத்து கொண்டு வரும் அளவிற்கு எவ்விதமான சேதாரமும் அதில் காணப்படவில்லை. மேலும் பிரோவில் லாக்கர் ஏதும் சேதம் அடைந்ததாக காணப்படவில்லை. மேற்படி மனுவில் கூறிய சங்கதியினை நிரூபிக்கும் பொருட்டு கண்ணுற்ற சாட்சிகளாக யாரையும் மனுதாரர்கள் தாப்பில் தெரிவிக்கப்படவில்லை. மேலும் மனுதாரர்கள் குறிப்பிடும் வீட்டிற்கு அருகில் வசிக்கும் நபர்கள் யாரையும் மனுதாரர்கள் தங்களுடைய அபிடவிட்டில் தெரிவிக்கவில்லை. இதிலிருந்தே மனுதாரரின் கூற்று தவறு என்பது தெரியவருகின்றது. எனவே மேற்கண்ட மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யபோவதாக கூறப்படும் மனுவில் கண்டுள்ள ஆவணத்திற்க்கும் மேற்கண்ட எதிர்மனுதாரர்களுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது. மேலும் மேற்கண்ட மனுதாரரின் மனுவானது பாரதிய சாட்சிய அதிநியம் 2023 பிரிவு 63 ன் படி எதிரானது ஆகும். எனவே மேற்கண்ட மனு நிலைக்கதக்கதல்ல. மேற்கண்ட மனுவிற்கு வியாஜ்ஜியமூலம் ஏதும் கிடையாது. எனவே மனுவினை இவ்வெதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

13. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

14. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால், எதிர்மனுதாரர்கள் மீது பொருட்கள் சேதமடைந்ததற்கான இழப்பீடு கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் வீட்டில் இருந்த பொருட்களை அடித்து உடைத்து சேதப்படுத்தியதற்கான 16 புகைபடங்கள் மற்றும் குறுந்தகடு மற்றும் வீடியோ கேசட் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தற்போது குறுந்தகடு மற்றும் வீடியோ கேசட்டை பார்ப்பதற்கான மின்னணு இயந்திரங்கள் இல்லை என்பதால், அந்த புகைபடங்களை பென்–ட்ரைவில் தரவிறக்கம் செய்து மேற்படி பென்–ட்ரைவ்வை இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தரவிறக்கம்

செய்வதற்கான ஏற்பட்ட செலவிற்கான ரசீது மேற்படி மின்னணு ஆவணங்களை தரவிறக்கம் செய்த நபரின் சான்று மற்றும் 2023ம் ஆண்டு பாரதிய சாட்சிய அதிநியம் சட்டப் பிரிவு 63ன் படியான சான்று ஆகியவற்றை இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவை அனுமதிக்கும்படி வாதம் செய்யப்பட்டுள்ளது.

15. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், 1ம் மனுதாரரின் மகன்கள், 1ம் எதிர்மனுதாரர் விநாயகம் என்பவரை தாக்கியது குறித்து கண்ணமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அதன்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு 1ம் மனுதாரர் கைது செய்யப்பட்டார். அந்த குற்ற வழக்கை 1ம் எதிர்மனுதாரர் வாப்பஸ் பெற மறுத்துவிட்டதால், விரோதம் கொண்டு, 1ம் எதிர்மனுதாரர் விநாயகம் மீது பொய்யான அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர்கள் எந்த இடத்தில் எந்த வீட்டில் வசித்து வருகிறார்கள் என்று குறிப்பிடவில்லை. எந்த வீட்டில் எதிர்மனுதாரர்கள் பொருட்களை சேதப்படுத்தினார்கள் என்று குறிப்பாக கூறவில்லை. சம்பவம் நடந்த இடம் குறித்து அசல் வழக்கில் குறிப்பிடவில்லை. 10 வருடமாக யாரும் குடியிருக்காத வீட்டில் மனுதாரர்கள் கூறியிருப்பது போல் பொருட்கள் இருந்தது என்பதை மனுதாரர்கள் நிரூபணம் செய்யவேண்டும். மனுதாரர்கள் ஆரணி தாலுக்கா, முள்ளிப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறார்கள். புகைப்படங்கள் எப்போது எடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இணைக்கப்படவில்லை. சேதமடைந்த பொருட்கள் மனுதாரர் குறிப்பிடும் வீட்டில் இருந்தது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இம்மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் கொடுத்த புகார் மீது விசாரணை செய்யப்பட்டு புகாரானது பொய்யானது என்று தெரியவந்ததால், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எலக்ட்ரானிக்கு பொருட்கள் விற்பனை செய்வது சம்மந்தமாக மனுதாரர்கள் எந்த உரிமமும் தாக்கல் செய்யவில்லை. சேதமடைந்ததாக கூறப்படும் பொருட்களின் மதிப்பு குறித்து அது சம்மந்தப்பட்ட நிறுவனத்தில் இருந்து பெற்ற விலை பட்டியல் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 16 புகைபடங்கள் அடங்கிய தொகுப்பில் உள்ள அனைத்தும் மனுதாரர்களாக பொய்யாக புனையப்பட்ட கருத்துக்கள் ஆகும். அந்த புகைபடங்களில் உள்ள டி.வி. பிரிட்ஜ், சேர்கள், பேன் மற்றும் எலக்ட்ரானிக் சாமான்கள் நல்ல நிலையில் உள்ளது. கதவில் உள்ள பூட்டு பூட்டப்பட்டுள்ளது. எனவே கதவு உடைக்கப்பட்டு சேதம் ஏற்படவில்லை. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணத்திற்கும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணத்திற்கும் சம்மந்தம் இல்லை. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

16. அசல் வழக்குரையில், ஆவண வரிசை பட்டியலில் 7வது ஆவணமாக 16 புகைபடங்கள் மற்றும் குறுந்தகடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள அந்த 16 புகைபடங்களும் அதற்குண்டான பென்–ட்ரைவ்

தாக்கல் செய்வதற்காகவும், மின்னணு ஆவணமாக தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட ரசீது மற்றும் 2023ம் ஆண்டு பாரதிய சாட்சிய அதிநியம் சட்டப்பிரிவு 63ன் படியான சான்று ஆகியவற்றை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதிவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யும்போது புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. வழக்கிற்காக அந்த ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்றும், மனுவை தள்ளுபடி செய்வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதம் ஏற்கும் வகையில் இல்லை. ஏனென்றால் அசல் வழக்குடன் 16 புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வழக்குரையுடன் தாக்கல் செய்த 16 புகைப்படங்கள் மற்றும் அந்த புகைப்படங்களுக்குண்டான பென்–ட்ரைவ் மற்றும் புகைப்படங்களை பென்–ட்ரைவில் பதிவிறக்கம் செய்யதற்கான சான்று ஆகியவற்றை மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்களாக ஏற்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கை தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 16 புகைப்படங்கள் மற்றும் அதற்குண்டான பென்–ட்ரைவ் மற்றும் அதற்குண்டான சான்று அவசியம் ஆகும். எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர்களின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.02.16 17:31:49 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–**</u> இல்லை

BASKARAN S
Digitally signed by BASKARAN S
Date: 2026.02.16 17:31:59 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.